**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4700

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 29.10.2021

Accepted: 12.12.2021

Published: 01.01.2022

Citation:
Srinivasan, S. "Tamil Language Teaching and Techniques through Fine Arts Activities." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 235–241.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4700

*Corresponding Author:
tamilvasan86@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tamil Language Teaching and Techniques through Fine Arts Activities

**Dr. S. Srinivasan**
*Assitant Professor, Department of Tamil*
*St.Joseph's College, Trichy, Tamil Nadu, India*
http://orcid.org/0000-0002-6117-1159

**Abstract -** Change is taking place in all fields in this society which can be developed by the advancement of science and technology. Disappointment is to be the sower of good. At the same time, new initiatives are being taken in the field of education. There is a lot of research being done on how to make education easier for students. Blind mindset is increasingly being manipulated in today's education system. You can also see the way many educational institutions bully students in order to get high marks. When such activities take place, students can be easily educated through arts such as music, painting and drama; Akkalas can simplify learning like way tutorial. Students will easily achieve the level of learning by eliminating the blind mindset.

**Keywords:** Tamil Language Teaching, Art, Music, Koothu, Drama, Painting, Screenplay

**References**

1. Po.ve. Somasundaranar, (U.A.). 2007. *Pathupattu*, Tirunelveli, Saiva Siddhanta Nurupathippukkalam, 522, D.T.K. Road, Alwarpet, Chennai.
2. Mayilai Srini. 2012. Venkatasamy, Manonmaniyam, Chennai, Sharda Publishing.
3. Thirukkural. 2019. Parimalajagar Text, National Publishers.

# நுண்கலைச் செயல்பாடுகளின் வழி தமிழ்மொழி கற்பித்தலும் நுட்பங்களும்

***முனைவர் சு. சீனிவாசன்***
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச் சுருக்கம்***
*அறிவியல் தொழில் நுட்ப முன்னேற்றத்தால் வளர்ந்து வரக் கூடிய இச்சமூகத்தில் அனைத்துத் துறைகளிலும் மாற்றம் என்பது நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அம்மாற்றம் என்பது நல்லனவற்றை விதைப்பவனாக அமைய வேண்டும். அவ்வகையில் கல்வித்துறையிலும் புதிய புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்குக் கல்வியை எவ்வாறு எளிமையாகப் புகட்டலாம் என்பது குறித்து பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றையக் கல்விமுறையில் குருட்டு மனப்பாடம் என்பது அதிகமாகக் கையாளப்பட்டு வருகின்றது. மாணவர்கள் அதிகமாக மதிப்பெண் பெற வேண்டும் என்பதற்காக பல கல்வி நிறுவனங்கள் மாணவர்களை வதைக்கும் முறையையும் காண முடிகிறது. இதுபோன்ற செயல்கள் நடைபெறமால் மாணவர்களுக்கு இசை, ஓவியம், நாடகம் போன்ற கலைகள் வழி கல்வியை எளிமையாகத் தர முடியும். அக்கலைகள் வழி செய்முறை பயிற்சி போன்று கற்றலை எளிமையாக்க முடியும். குருட்டு மனப்பாட முறையை ஒழித்து புரிந்து கொண்டு கற்கும் நிலையை மாணவர்கள் இக்கலைகள் வழி எளிதில் அடைவர்.*
***முக்கியச் சொற்கள்:*** *பண், இசை, கூத்து, நாடகம், திரைக்கலை, கற்றல், கற்பித்தல், நுண்கலை*

இன்றையச் சமூகத்தில் அறிவியல் நுட்பங்களும் புது புதுக் கண்டுபிடிப்புகளும் உருவாகிக்கொண்டிருக்கின்றன. இன்றைய மனிதனும் ஏதாவது ஒரு புதுமைச் செய்தியை விரும்புபவனாக இருக்கின்றான். பண்டையக் காலத்தில் இருந்து மனிதன் கலைகளை விரும்பி வளர்தெடுத்துப் பேணிக்காத்து வருகின்றான். இசைக் கலை, நாடகக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை எனப் பல்வேறு கலைகளில் தேர்ந்து இக்கலைகள் வழி நமது பண்பாட்டையும் திறத்தையும் உலகம் அறியச்செய்திருக்கின்றான். இக்கலைகள் வழி உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் மொழியை எவ்வாறு கற்பிக்கலாம் என்றும் இக்கலைகளில் எவ்வெவ் நுட்பங்களைப் பொருத்தலாம் என்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இவ்ஆய்வுக்கட்டுரை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.

1. இசைக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல்
2. ஓவியக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல்
3. நாடகக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல்
4. திரைக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல்

## 1. இசைக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல்

இசைக்கு மயங்காத உயிர்கள் இவ்வுலகில் இல்லை. இசைக்கு மொழி, சாதி, மதம், இனம் என்ற வேறுபாடுகள் கிடையாது. இசைக்கலைகள் குறித்தும் இசைக்கருவிகள் குறித்தும் நமது பண்டைய இலக்கியங்களில் பல்வேறு குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. அவை ஒழுங்குப்படுத்தி இலக்கணத்துக்கு உட்பட்டு திருந்திய இசையாக அமைந்திருந்தன. இத்தகைய இசைவழி மாணர்களுக்கு இலக்கிய வகைமைகளில் செய்யுள் கற்பிப்பது பொருந்துவனவாக அமையும்.

காரணம் செய்யுள் பகுதியைப் படித்தும் காட்டுவதைவிட பாடல் பாடி கற்பிக்கும் பொழுது மாணவனின் கவனம் சிதறாமல் அவன் மனதில் பதியும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

இசைவழி தமிழ்மொழி கற்பித்தல் முறையில் வகுப்பில் மாணவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.




இவர்களுக்கு ஆசிரியர் பாடலில் உள்ள ஓசை நயம், ராகம் பாடும் முறை, இசைக் கருவி இயக்கும் முறை ஆகியவற்றிற்குப் பயிற்சி அளித்து இயக்குபவராக இருத்தல் வேண்டும்.

இறுதியில் பாடலின் விளக்கத்தை எடுத்துரைக்கவேண்டும். பின்பு ஒப்படைப்பு பணியையும் வழங்கலாம். சான்றாக சுந்தரரின் முதல் தேவாரப்பாடலை இசையோடு கற்பிக்கலாம்.

> **“பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா**
> **எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை**
> **வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்துறையுள்**
> **அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எல்லாமே”**
> **-இறையருள் பெறச்செய்யும் பதிகம்**

***பண்: இந்தளம் - இராகம்: மாயமாளவகௌளை – தாளம் : ரூபம்***

இவ்வாறு செய்யுள் கற்பிக்கும் பொழுது அவன் மனதில் பாடல் நீங்காத இடத்தைப் பெறுவதோடு மட்டுமல்லாமல் பாடும் திறனும் இசைக்கும் திறனும் அவனுக்குக் கிடைத்து விடுகிறது. இக்கற்பித்தல் வழி ஆசிரியர்கள் மாணவர்கள் விரும்பும் ஆசிரியராக உருவெடுக்கலாம்.

இவ்இசைமுறை நமது மரபுவழி கற்பித்தல் முறை. அன்றைய தமிழ்மொழிப் பேராசிரியர்கள் இம்முறையைப் பயன் படுத்தி இசையோடு கற்பிக்கக்கூடிய பல மாணவர்களை உருவாக்கினர். கற்றலும் எளிமையானது. தமிழ்மொழியும் தம் இயல்பும் வளமும் குன்றாமல் இருந்தது. தமிழ்மொழி இலக்கியங்கள் முன்பு இசைவழிக் கற்றல், கற்பித்தல் நிலை நடைபெற்றதால் பல இலக்கியங்களைத் தங்கள் மனதிலே நிறுத்தி மனனமாக விளக்கத்துடன் சொல்லும் திறமை மாணவர்களிடத்தில் இருந்தது. இசையோடு தமிழ்மொழியைக் கற்பிப்பதில் எப்போது தமிழாசிரியர்களுக்குப் பின்னடைவு ஏற்பட்டதோ அன்றே தமிழ் மொழி கற்பித்தலிலும் பின்னடைவு ஏற்பட்டது என்று கருத இடம் உண்டு,

**2. ஓவியக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல்**

மனிதன் கண்ணால் காண்கின்ற பொருள்களைமனதிலேபதிந்து, தாம்கண்ட பொருளை அவ்வாறே சித்தரித்து எழுத்தக் கூடிய அல்லது வரையக்கூடிய கலையே ஓவியக்கலை. இவ்ஓவியக்கலையை மனிதன் பழங்காலத்தில் பாறைகளிலும் தாம் வாழ்ந்த குகைளிலும் வரைந்து பயன்படுத்தினான். இக்கலைகள் குறித்து சிலப்பதிகாரம், மாதவி ஆடிய அரங்கின் மேற்கூரையில் பல வகை வண்ணங்கள் தீட்டப்பட்டிருந்ததை சிறப்புற எடுத்துரைக்கின்றது. சித்தன்ன வாசல் ஓவியம் ஓவியக்கலைக்கு சிறந்த எடுத்துகாட்டாகத் திகழ்கிறது. இத்தகைய ஓவியக்கலை வழி இலக்கிய வகைமைகளுள் உரைநடை வகையை மாணவர்களுக்குக் கற்பிக்கலாம். செய்யுள் பகுதியில் விளக்கிக் கூறப்படும் கருத்துக்கும் உரைநடை

வடிவில் அமைந்திருக்கும் இலக்கிய கருத்திற்கும் மாணவர்களை ஓவியம் வரையச் செய்யலாம். ஆசிரியரும் ஓவியம் வரைந்து கற்பிக்கலாம். சான்றாக நெடுநல்வாடையில் அமைந்த செய்யுள் கருத்தைப் பகுதி பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். பின்பு முறைப்படி வரையச்செய்தல் வேண்டும்.



மேற்கண்ட வரைபடம் 188 அடிகளில் அமைந்த நெடுநல்வாடை இலக்கியம். இவ்விலக்கியம் பாடுபொருள் அடிப்படையில் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவை உள்ளடக்கத்தலைப்பு கொண்டு பகுக்கப்படுகிறது. இவ்வாறு பகுக்கப்பட்ட பகுதிகளை ஆசிரியர்கள் வரைந்து நடத்தலாம். மாணவர்களுக்குப் பாடம் விளக்கப்பட்ட பின்னர் தனித்தனியாகவோ அல்லது குழுவாகப் பிரிந்தோ வரையச் செய்யலாம். இவ்வாறு தமிழ்மொழி கற்பிக்கும்பொழுது இவ்விலக்கியம் அவனுக்கு இனிமையாகவும் செறிவாகவும் சென்றடையும். மேலும் மாணவர்களின் கைகளுக்குச் சிறந்த தசைப்பயிற்சியாக அமைவதோடு அவர்களிடையே படைப் பாற்றல் திறனும் மேம்படும். மொழிக் கற்றலும் எளிமையாகும்.

மனோன்மணீய நாடகச் செய்யுளில் பல பகுதிகள் வரைந்து கற்பிக்கக் கூடியனவாக இருக்கின்றன. சான்றாக பாயிரச் செய்திகளில் வரும் சில கருத்துக்கள், கோட்டை வருணனை ஆகியவற்றைக் கற்பிக்கும் பொழுது அதனை வரைந்து கற்பித்தால் எளிமையாக மனதில் பதியும்.



(இவ்வரைபடம் எம் மாணவியால் வரையப்பட்டது.)

இவ்வாறு கற்பித்தலால் அடுத்தடுத்து இலக்கியம் கற்பிக்கும்பொழுது மாணவர்கள் பாடத்தை கவனித்து நூலில் கற்பிக்கும் பாடப்பகுதியின் அருகே நாம் சொல்லும் விளக்கங்களுக்குப் படம் வரைந்து கற்றல் செயலை எளிமையாக்கிக் கொள்வார்கள்.

### 3. நாடகக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல்

ஆதிகாலத்தில் மனிதன் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்க ஒலிகள் மற்றும் சைகைகளைப் பயன்படுத்தினான். பின்னாளில் பண்டைய மனிதன் தனக்கு உணவு கொடுத்தது தனக்கு மீறிய ஒரு சக்தி என்று இயற்கையைக் கருதி தெய்வமாக வணங்கி ஆடிப்பாடி மகிழ்ந்தான். இந்த ஆட்டமே பின்னாளில் கூத்து என்றும் இக்கூத்து என்ற சொல் நடனத்தையும் பின் நாடகத்தையும் குறித்தது என்றும் கூறுவர். நடனத்தையும் நாடகத்தையும்கூத்தர்என்னும்கலைஞர்கள் பேணிக்காத்து வந்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் பம்மல் சம்பந்தர், சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோர் நாடகக்கலையை வளர்த்தனர். மனிதனுடைய இன்பம், துன்பம், வாழ்க்கைமுறை போன்றவற்றை நடித்துக் காட்டுவதே நாடகம். இத்தகைய நாடக்கலையைப் பயன்படுத்தி மாணவர்

களுக்குத் தமிழ்மொழி கற்பித்தலை மேற்கொள்ளலாம்.

நாடகத்தின் வழி பல உத்தி முறைகளில் தமிழ்மொழியைக் கற்பிக்கலாம்.

**1. வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவரும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்படலாம்.**

1.1. நாடகத்தை நடத்தும் ஆசிரியர் குழு (மாணவர் மாதிரி)

1.2. மாணவர் குழு

1.3. பொதுமக்கள் குழு (மாணவர் மாதிரி)

இவ்வாறு பிரித்தப்பின்னர் ஆசிரியர் குழு ஏதேனும் ஒரு இலக்கியப்பகுதியை வினாவிடை அமைப்பில் தயாரித்து மாணவர் குழுவிடம் கொடுக்க வேண்டும். மாணவர் குழுவில் உள்ள ஒருவர் இலக்கிய வினா கேட்க மற்றொருவர் விடை அளிப்பது போல நாடகம் அமைதல் வேண்டும். பொது மக்கள்குழு பார்வையாளராக இருப்பர். இதற்கு ஆசிரியர், மாணவர்களிடத்தில் கதாப்பாத்திரங்களின் தன்மையை விளக்கி, வசன உச்சரிப்பு, முகபாவம், ஏற்றத்தாழ்வு , மேடை நாகரிகம் போன்றவற்றைச் செய்ய பயிற்சி அளிக்க வேண்டும்.

**2. பல்திறமை நடிப்பு**

ஆசிரியர் நாடகப்பாடப்பகுதியை நடத்தி முடித்தப்பின்னர் திறமையான மாணவர்களைக் கண்டறிந்து நாடகத்தில் வரும் பல கதாபாத்திரங்களைத் அவன் மட்டும் நடித்துக் காட்டுமாறு பயிற்சி யளிக்கலாம். சான்றாக சிலப்பதிகாரத்தில் வரும் வழக்குரைக்காதையில் மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன், கண்ணகி, வாயிற்காவலன், பாண்டிமாதேவி ஆகியோரின் கதாபாத்திரங்களைத் தான் ஒருவன் மட்டுமே ஏற்று நடிக்குமாறு பணிக்கலாம். ஆசிரியரும் கூட நடித்துக்காட்டலாம்.







(இப்புகைப்படத்தில் உள்ளவர் எம் மாணவர். பெண் வேடமிட்டு கண்ணகி கதாபாத்திரம் மட்டும் அல்லாது வாயிற் காவலன், பாண்டிய மன்னன் கதாபாத் திரத்தையும் ஏற்று நடித்தவர்)

இதுபோன்று நடிப்பின் வழி பாடம் கற்பிக்கும்பொழுது மாணவர்களின் மனதில், பதிந்து பாடப்பகுதி எளிமையாகச் சென்றடையும். மாணவர்களின் நடிப்புத் திறனும், படைப்புத்திறனும் வளரும். எதிர்காலத்தில் திறமை வாய்ந்த நடிகனாக மாறுவதற்கு வாய்ப்பாக அமையும்.

**4. திரைக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல்:**

இன்றைய உலகில் திரைக்கலை என்பது மக்களிடத்தில் இரண்டற கலந்து உள்ளது எனலாம். சமுதாயத்திற்கு ஒரு செய்தியை வலியுறுத்த வேண்டுமென்றால் திரைக்கலைவழி எளிமையாகக் கொண்டு சேர்க்க முடியும். அது போன்றே மாணவர்களுக்கும் கல்வியைத் திரைக்கலை வழி எளிமையாகக் கொண்டு சேர்க்கலாம்.

ஒரு பாடப்பகுதியை ஆசிரியர் கற்பிக்கும் பொழுது அவனது கவனம் சிதறாமல் இருப்பதற்கு அவ்வப்போது திரைக்கலையைக் கையாளலாம்.

திரைப்படக்கலையைப் பொறுத்த வரையில் இலக்கணம், இலக்கியம் என எல்லாவகையான இலக்கிய வகைமைக்கும் சான்று காட்டிக் கற்பிக்கலாம்.

**இலக்கணம் கற்பித்தல்**

இலக்கணத்தில் அணியைக் கற்பிக்கும் பொழுது திரைப்பட பாடலையோ அல்லது உரையாடலையோ சான்று காட்டலாம்.

சான்றாக: **இல்பொருள் உவமை அணி:** இயற்கையில் இல்லாத ஒரு பொருளை இருப்பது போலக் கற்பனை செய்து கொண்டு அக்கற்பனைப் பொருளை உவமையாக்குவதே இல்பொருள் உவமையணி.

இவ்அணியை "ஜெமினி" திரைப்பட பாடல் வழி மாணவர்களுக்கு விளக்கலாம்.

**"நெருப்புக்கு சேலை கட்டி அனுப்பி வைத்தாள்**
**நிலவுக்கு வன்முறைகள் கற்றுக் கொடுத்தாள்"**

இப்பாடலைக் கூறியவுடன் புரிந்து கொள்வார்கள். பின்பு திருக்குறளின் வழி ஒரு சான்றினைக் காட்டலாம்.

**"அன்பகத் தில்லார் உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த்தற்று" (குறள். 78)**

பாலையில் நீரின்றிக் காய்ந்து வரண்டுபோன வற்றல்மரம் மீண்டும் தளிர்த்தல் இயற்கையில் நிகழாத ஒன்று. உள்ளத்தில் அன்பற்ற உயிர் வாழ்வுக்கு இதனை உவமையாக்கிமையால் இது இல்பொருள் உவமையணியாகும்.

**தற்குறிப்பேற்ற அணி**

இயல்பாக நடக்கின்ற ஒரு நிகழ்வின் மீது கவிஞர் தம் கற்பனைத் திறத்தை ஏற்றிக் கூறுவது. (தன் குறிப்பை ஏற்றிச் சொல்லுதல்)

இவ்அணியை "பயணங்கள் முடிவதில்லை" திரைப்பட பாடல் வழி மாணவர்களுக்கு விளக்கலாம்.

**"முகிலினங்கள் அலைகிறதே**
**முகவரிகள் தொலைந்தனவோ**
**முகவரிகள் தவறியதால்**
**அழுதிடுமோ அது மழையோ**
**நீல வானிலே வெள்ளி ஓடைகள்**
**போடுகின்றதே என்ன ஜாடைகள்**
**விண்வெளியில் விதைத்தது யார் நவமணிகள்"**

என்று கூறிவிட்டு சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகரத்திற்குள் நுழைய முற்படும் போது இயல்பாகக் காற்றிலாடும் தோரண வாயிற் கொடிகளைக் கவிஞர் தம் கற்பனையினால் கோவலன் மதுரையில் கொல்லப்படுவான் என்று முன்னமே அறிந்து வர வேண்டாம் என அக்கொடிகள் எச்சரிப்பதாகக் குறிப்பேற்றிக் கூறும் முறையைக் கூறலாம்.

**திரைப்பட உரையாடல் வழி இலக்கணம் கற்பிக்கலாம்**

திரைப்பட உரையாடல் வழியும் இலக்கணம் கற்பிக்கலாம். கவிஞர் பாடலில் தாம் கூறும் கருத்தினை எண்வகைச் சுவை தோன்றப் பாடுவதால் அப்பாடலில் பொருள் அழகு பெற்றுத் திகழ்கின்றது. இதுவே சுவை அணி ஆகும்.

சான்றாக வடிவேல் ஒரு திரைப்படத்தில் தோசை உண்பதற்கு உணவு விடுதிக்குச் செல்வார். அப்போது தோசை எவ்வாறு

வேண்டும் என்பதை சுவைபடக் கூறுவார். இவ்உரையாடலைக் கூறியும் கற்பிக்கலாம். காணொளியாகவும் கற்பிக்கலாம்.

“ஒரு கிண்ணம் நிறைய மாவெடுத்து பெரிய ரவுண்டாவும் இல்லாம சின்ன ரவுண்டாவும் இல்லாம பொதுவா ஒரு ரவுண்ட ஊத்தி, நாலைஞ்சு வெங்காயத்த பொடி பொடியா நறுக்கி மேலாவ தூவிவிட்டு, ஒரு நீளமான கேரட்ட எடுத்து அதையும் பொடி பொடியா நறுக்கி அப்படியே மேலாவ பரபரன்னு தூவிவிட்டு, ஒரு பதினாறு கரண்டி நெய்ய எடுத்து அதுல ஆறு கரண்டி நெய்ய உள் சைடு அப்டியே மேலாவ விலாவிவிட்டு, பத்து கரண்டி நெய்ய தோசைக்கு வெளி சைடு விலாவிட்டு, இட்லி பொடி இருக்குல்ல அதை அப்படியே மழைச்சரால் போல பர பரன்னு தூவிவிட்டு, பொத்து னாப்பல அப்படி ஒரு பெரட்டு இப்டி ஒரு பெரட்டிவிட்டு ரெட் கலர்ல முருக விட்டு, அழகா மடிச்சி கமகமன்னு ஒரு ஊத்தப்பத்த எடுத்துட்டு வாங்க”

உவமையணி என்பது கூறக் கருதியப் பொருளை நன்கு தெரிந்த ஒன்றைக் காட்டி விளக்குவது. ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகுபடுத்திக் கூறுவது.

சான்றாக இவ்உரையாடலைக் இதுபோன்ற படத்தினைக்காட்டி உரையாடலைச் சொல்லச் சொல்லியும் கற்பிக்கலாம்.




**முடிவுகள்**

இசைக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல் என்பது பண்டையக் கால கல்விமுறையில் இருந்தது. தற்போது இக்கல்விமுறை சிதைந்து மீண்டும் இசைவழிக் கற்பித்தல் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஆசிரியர்கள் இசை வகுப்பு பயிற்சியோ அல்லது இணையவழியிலோ பாடல்களைக் கற்றுத்தேர்ந்து கல்வி முறையை எளிதாக்கிக் தமிழ்மொழிப் பாடத்தைக் கற்பிக்கலாம் என்பதை உணர முடிகிறது.

ஓவியக்கலை வழி தமிழ்மொழி கற்பித்தல் முறையைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பித்தால் தசைப்பயிற்சியும், ஓவியம் வரையும் ஆற்றலும் உருவாகும் என்பதையும், இக்கற்பித்தல் வழி பாடப்பகுதி எளிமையாக அமையும் என்பதையும் அறிய முடிகிறது.

நாடகக்கலை வழி தமிழ்மொழி கற்பிக்கும் பொழுது மாணவர்களின் மனதில், பதிந்து பாடப்பகுதி எளிமையாகச் சென்றடையும். மாணவர்களின் நடிப்புத்திறனும், படைப்புத்திறனும் வளரும். எதிர்காலத்தில் திறமை வாய்ந்த நடிகனாக மாறுவதற்கு வாய்ப்பாக அமையும்.

**துணைநின்ற நூல்கள்**

1. பொ.வே. (சோமசுந்தரனார், உ.ஆ). 2007. பத்துப்பாட்டு பகுதி - 2 திருநெல்வேலி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 522, டி.டி.கே. சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை.
2. மயிலை சீனி. வேங்கடசாமி, 2012. மனோன்மணீயம், சென்னை, சாரதா பதிப்பகம்.
3. திருக்குறள். 2019. பரிமேலழகர் உரை, நேஷனல் பப்ளிஷர்ஸ்.